# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 30.03.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த ஜுமுஆ குத்பாவில் பைஅத் நிபந்தனைகளின் அடிப்படையில் ஜமாஅத்தினருக்கு ஓர் அஹ்மதியின் பொறுப்புகளை கவனமூட்டினேன். அதில் ஒவ்வொரு நிபந்தனையையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்கள் மூலமாகவே விளக்கினேன். அந்த நிபந்தனைகளையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களையும் படித்து அதனை ஆய்வு செய்யும்போது அன்னார் நமக்குள் இஸ்லாத்தின் உண்மையான போதனையை நுழைத்து, நம்முடைய கொள்கை மற்றும் அமல்களில் சீர்திருத்தம் செய்து, நம்மிடம் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த விரும்பியிருந்தார்கள் என்று தெரிய வருகிறது. ஏனெனில் அதுவன்றி அவர்களின் வருகையின் மகத்தான நோக்கம் நிறைவேற முடியாது. அந்த நோக்கமோ காலத்திற்கு மிக முக்கிய தேவையாக இருந்தது; இருக்கிறது. அதன் மூலமே அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற முடியும்.

**அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இந்த இபாதத்தின் மூலம் இறைவன் விரும்புவதாவது, அவன் அதனை என்னிடம் வெளிப்படுத்தினான். தக்வா குறைந்து விட்டது. சிலர் வெட்கமற்ற காரியத்தில் மூழ்கி விட்டனர். கட்டுப்படாமை மற்றும் தீமையில் பீடிக்கப்பட்டுள்ளனர். சிலர் ஒருவகையான தூய்மையின்மையை தமது அமல்களுடன் கலப்படம் செய்து விட்டனர். ஆனால் அவர்களுக்கு அது தெரியாது. நல்ல உணவில் சிறிதளவு விஷம் கலந்து விட்டால் முழு உணவுமே நஞ்சாகி விடும். சிலர் சிறு சிறு பாவம், காட்டுதல் ஆகியவற்றில் மூழ்கியுள்ளனர். அவற்றின் கிளைகள் மிகவும் நுட்பமானவை. அவர்கள் வெளிப்படையாக பெரும் மார்க்கவாதிகள் என்று நினைக்கின்றனர். ஆனால் அவர்கள், தாழ்வு மனப்பான்மை, காட்டுதல் மற்றும் நுட்பமான பாவங்களில் மூழ்கியுள்ளனர். அவற்றை மிகவும் நுட்பமான பார்வையுடன் பார்த்தால் தான் தென்படும்.

**மேலும் கூறுகின்றார்கள்:** இப்போது அல்லாஹ் உலகிற்கு தக்வா மற்றும் தூய்மையின் வாழ்வுக்கான முன்மாதிரியை காட்ட வேண்டும் என்று விரும்பினான். இதே நோக்கத்துடனேயே இறைவன் இந்த இயக்கத்தை நிறுவினான். அவன் தூய்மையை விரும்புகிறான். ஒரு தூய ஜமாஅத்தை உருவாக்குவது அவனது விருப்பமாகும்.

எனவே அல்லாஹ் இந்த ஜமாஅத்தில் இணைபவர்களை குறிப்பாக தூய்மைப்படுத்த நாடுகின்றான். அதன் மூலம் தூய ஜமாஅத்தை நிலைநாட்ட விரும்புகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மில் ஒவ்வொருவரிடமும், இந்த ஆழிய ஞானத்துடன் நுண்ணிய பார்வையை உருவாக்க விரும்புகிறார்கள். அதன் மூலமே நாம் நமது நஃப்ஸை காண வேண்டும் என்று விரும்புகிறார்கள். நாம் நமது நஃப்ஸை கணக்கிட வேண்டும். நமது கொள்கைரீதியான தவறுகளை சீர்திருத்துவதுடன் ஒவ்வொரு சின்னஞ்சிறு செயல்ரீதியான தவறுகளையும் திருத்த வேண்டும். நமது அமல்களைக் கவனித்துப் பார்க்க வேண்டும். இந்த ஆழிய ஞானத்துடன் கூடிய நுட்பமான பார்வையே சாதாரண தவறுகளையும் நன்கு பெரிதாக்கிக் காட்டும். இந்த ஆழிய ஞானத்துடன் கூடிய அப்பார்வையின்படியே ஒரு நுண்ணோக்கியைப் போன்று நுட்பத்திலும் நுட்பமான தவறுகளையும் பெரிதாக்கிக் காட்டுவது தான். எனவே தமது பாவங்களையும், தவறுகளையும், பலவீனங்களையும் பார்ப்பதற்காக அந்த ஆழிய ஞானத்துடன் கூடிய நுட்பமான பார்வையை நுண்ணோக்கியைப் போன்று பயன்படுத்த வேண்டி வரும். அதன் மூலமே நம்மை ஆய்வு செய்ய முடியும்.

இந்த சிந்தனையுடன் நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நாம் அஹ்மதியாக இருப்பதாக செய்யும் வாதம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய ஜமாஅத் இரண்டுமே சாதாரணமானதன்று.

நமது அஹ்மதி என்ற வாதமும் சாதாரணமானதல்ல. நமது ஜமாஅத் ஒரு சாதாரண ஜமாஅத்தும் அல்ல. அல்லாஹ் இந்த ஜமாஅத்தின் உறுப்பினர்களை தூய்மையாக்கி இதனை ஓர் தூய ஜமாஅத் ஆக்க விரும்புகிறான். இதற்காக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். இதனை ஒவ்வொரு அஹ்மதியும் கவனத்தில் கொள்ள வேண்டும். தக்வா மற்றும் தூய வாழ்வு உடைய முன்மாதிரியே புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இந்த புரட்சிகர மாற்றம் நமது கொள்கைகளின் சீர்திருத்தம், அமல்களின் சீர்திருத்தத்தைச் சார்ந்துள்ளது. அமல்களின் சீர்திருத்தம் சேராத வரை வெறும் கொள்கை சீர்திருத்தம் மட்டும் எந்தப் பயனும் தராது.

நம்மில் ஒவ்வொருவருக்கும் அமல்கள் குறித்த கவலையில்லாத வரை எந்தப் பயனும் தராது. என்ன கொள்கை நம்மிடம் இருக்க வேண்டும்? என்ன அமலில் நாம் கவனம் செலுத்த வேண்டும்?

இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோளைப் படித்தேன். சிறு சிறு நன்மைகளையும் கடைபிடிப்பது அவசியமாகும். இதனையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஓரிடத்தில் மேலும் விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது கொள்கை, அமலின் தரம் குறித்து ஜமாஅத்திற்குக் கவனமூட்டியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள். நமது மார்க்கத்தின் சுருக்கம், நமது கொள்கை என்ன? இதில் நமது கொள்கை பற்றியும் தெளிவு ஏற்படும். அத்துடன் தொடர்புடைய நமது அமல் குறித்தும் தெளிவு ஏற்படும்.

கூறுகின்றார்கள்: நமது மார்க்கத்தின் சுருக்கமும் அடிப்படையும் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஆகும். இவ்வுலக வாழ்விலும் நாம் இதே கொள்கையையே கொண்டுள்ளோம். இந்த கொள்கையுடனேயே இறை அருளால் இவ்வுலகை விட்டுச் செல்வோம். ஹஸ்ரத் ஸய்யதுனா மவ்லானா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனும் கைருல் முர்ஸலீனும் ஆவார்கள். அவர்களின் கையால் மார்க்கம் நிறைவடைந்துள்ளது. நிஃமத்துகள் முழுமை அடைந்துள்ளன. அதன் மூலமாக மனிதன் நேர்வழியைப் பெற்று இறைவன் வரை சென்றடைய முடியும். நாம் உறுதியான யகீனுடன் அதில் ஈமான் கொண்டுள்ளோம். திருக்குர்ஆன் வானத்து வேதங்களுள் காதம் ஆகும். ஷரீஅத்தின் வரம்புகள் அதன் கட்டளைகள், அதன் ஏவல்களில் ஒரு புள்ளியைக் கூட அதிகமாக்க முடியாது; குறைக்கவும் முடியாது. அல்லாஹ்விடமிருந்து இனி எந்த வஹியும், இல்ஹாமும், ஃபுர்கானாகிய இந்த வேதத்தின் கட்டளைகளை மாற்றி, இரத்து செய்ய, மாற்றி அமைக்கக் கூடியதாக வர முடியாது. எவராவது அவ்வாறு நடக்க முடியும் என்று கருதுவார் எனில் அவர் நமது பார்வையில் மூஃமின்களின் ஜமாஅத்திலிருந்து வெளியேறியவரும், காஃபிரும் ஆவார். நமது ஈமானாவது சிராத்தே முஸ்தகீமின் (நேர்வழியின்) மிகக் குறைந்த அந்தஸ்தைக் கூட நமது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் மனிதன் பெற முடியாது. அதே வேளையில் நேர்வழியின் உயரிய இடத்தை அந்த ரஸூல்மார்களின் இமாமைப் பின்பற்றுவதன் மூலம் பெற முடியும்.

எந்த உயரிய அந்தஸ்தும் சிறப்பும் அல்லது கண்ணியம் மற்றும் நெருக்கத்தின் எந்த இடமும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையாக முழுமையாகப் பின்பற்றாமல் நாம் ஒருபோதும் பெற முடியாது. நமக்கு எது கிடைக்கிறதோ அது நிழலாகவே கிடைக்கிறது.

மேலும் நாம் இன்னொரு விஷயத்திலும் ஈமான் கொள்கிறோம். நன்னம்பிக்கையாளர் முழுமை பெற்றவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அண்மையின் சிறப்பபைப் பெற்றே எல்லா படித்தரங்களிலும் முழுமை அடைந்தார்கள.

அவர்களுடைய முழுமையுடன நமது முழுமைக்கு உள்ள தொடர்பாவது யதார்த்தத்தில் ஒரு நிழலேயாகும். அவற்றில் சில அருள்களின் பகுதிகள் எவ்வகையிலும் நாம் பெற முடியாததாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் உள்ள சில அருள்கள் இப்போது கிடைக்க முடியாது. அவர்கள் அன்னாரைப் பார்த்தார்கள். அவர்களின் அண்மையில் இருந்தார்கள்.

**மேலும் கூறுகின்றார்கள்:** இஸ்லாத்தின் அடிப்படையாக வைக்கப்பட்டுள்ள ஐந்து விஷயங்களே நமது கொள்கையாகும்.

ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களைப் போன்று நமது நாவிலும், அல்லாஹ்வுடைய வேதம் எங்களுக்கு போதுமானது என்ற வாசகமே உள்ளது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைப் போன்று ஹதீஸ் மற்றும் திருக்குர்ஆனுக்கு இடையில் முரண்பாடுகள் தென்பட்டால் நாம் திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் தருகிறோம். ஹதீஸின் மீது திருக்குர்ஆனுக்கு முன்னுரிமை உள்ளது.

கூறுகின்றார்கள்: நாம் ஈமான் கொள்வதாவது, இறைவனைத் தவிர வணக்கத்திற்கு தகுதியானவன் வேறு யாரும் இல்லை. ஸய்யதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அவனது ரஸுலும், காத்தமுல் அன்பியாவும் ஆவார்கள்; மலக்குகள் உண்மை. ஒன்றுகூட்டும் நாள் உண்மை; கணக்கெடுக்கும் நாள் உண்மை; ஜன்னத் உண்மை; நரகம் உண்மை என நாம் ஈமான் கொள்கிறோம்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் என்னவெல்லாம் கூறியுள்ளானோ, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னவெல்லாம் கூறியுள்ளார்களோ அவையனைத்தும் மேற்கூறப்பட்ட விளக்கத்தின்படி உண்மையாகும் என்று நாம் ஈமான் கொள்கிறோம். இஸ்லாமிய ஷரீஅத்தில் ஓர் அணு அளவு குறைத்தாலும் ஓர் அணு அளவு கூட்டினாலும், ஃபர்ளுகளை விட்டு விட்டு தம் விருப்பம்போல் அதனை மாற்றிக் கொண்டாலும் தமது விருப்பம் போல் ஹலால், ஹராம்களுக்கு தீர்ப்பு வழங்கினாலும் அத்தகையவர் ஈமான் அற்றவரும் இஸ்லாத்தை விட்டு தம்மை துண்டித்துக் கொண்டவரும் ஆவார். நாம் நமது ஜமாஅத்திற்கு போதனை செய்கிறோம். அவர்கள் உண்மையான உள்ளத்துடன் கலிமா தய்யிபா மீது ஈமான் கொள்ள வேண்டும். அதாவது, லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ். அதிலேயே மரணிக்க வேண்டும். எல்லா நபிமார்களும், வேதங்களும் அவற்றின் உண்மை திருக்குர்ஆன் மூலம் நிரூபணமாகி இருக்கும் எனில் அவை அனைத்தின் மீதும் ஈமான் கொள்ள வேண்டும். நோன்பு, தொழுகை, ஸக்காத், ஹஜ், இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட கடமைகள் ஆகியவற்றை பர்ளுகள் என்று கருதி, எல்லா விலக்கல்களையும் விலக்கல் என்று கருதி மிகச் சரியான இஸ்லாத்தின் மீது செயல்படுபவர்களாக இருக்க வேண்டும். சுருக்கமாக, முந்தைய சான்றோர்களால் கருத்து ஒருமித்து காணப்பட்ட எல்லா கொள்கைகளும், விஷயங்களும் அஹ்லே சுன்னத்தின் கருத்தின்படி இஸ்லாம் என்று அழைக்கப்படுகிறது. அவை அனைத்தையும் ஏற்றுக்கொள்வது ஃபர்ள் ஆகும். நாம் வானம் மற்றும் பூமியை இதற்கு சாட்சி ஆக்குகிறோம். இதுவே நமது மார்க்கமாகும்.

இறைவனைத் தவிர மற்ற அனைத்தும் அழியக்கூடியவை என்ற நமது கொள்கையை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒரு மனிதரேயாவர். நபியுல்லாஹ்வாக இருந்தார். இதன் அடிப்படையில் குறிப்பிட்ட வாழ்நாளுக்குப் பிறகு அவருக்கு வஃபாத் ஏற்பட்டது. ஆம்! சிலுவை மரணத்திலிருந்து இறைவன் அவரை காப்பாற்றினான். சிலுவை காயங்களிலிருந்து குணம் அளித்தான். பிறகு அவர்கள் ஹிஜ்ரத் செய்தார்கள். காஷ்மீரில் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆனது பற்றிய தமது கொள்கையைக் குறித்து ஓரிடத்தில் கூறுகின்றார்கள்.

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை வஃபாத் ஆனவர்கள், மரணித்தவரைச் சார்ந்தவர்கள் என்று மிக உறுதியாக நம்புகிறேன். அவர்கள் இறந்து போய் விட்டது குறித்து உறுதி கொள்கிறேன். ஏன் நான் உறுதி கொள்ளக் கூடாது? எனது எஜமானரும் தலைவரும் தனது கண்ணியத்திற்குரிய வேதமாகிய திருக்குர்ஆனில் அவரை வஃபாத் ஆனவர்களின் ஜமாஅத்தில் சேர்த்து விட்டார்கள். முழு குர்ஆனிலும் ஓரிடத்தில் கூட அவர்களது அசாதாரண வாழ்வு மற்றும் திரும்ப வருதல் குறித்து கூறப்படவே இல்லை. மாறாக, அவர்களை இறந்தவர் என்று மட்டும் கூறிவிட்டு மௌனமாகி விட்டது. அவர்களின் வாழ்வு, பூத உடலுடன் இருத்தல், ஏதாவது ஒரு காலத்தில் திரும்பி வருதல் ஆகியவற்றை எனக்கு வந்த இல்ஹாம்களின் அடிப்படையில் மாத்திரம் யதார்த்த சம்பவத்திற்கு முரணானது என்று கருதவில்லை. மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் உயிருடன் இருக்கிறார் என்ற கொள்கை தெளிவான மற்றும் உறுதியான குர்ஆனிய வார்த்தைகளின் அடிப்படையில் வீணானது என்றும், பொய்யானது என்றும் அறிகிறேன். அதாவது, திருக்குர்ஆனின் தெளிவான, உறுதியான, வெளிப்படையான வசனங்களின் அடிப்படையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்தவர் என்று கருதுகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறும் கூறுகின்றார்கள்:**

கொள்கை அடிப்படையில் உங்களுக்கும் மற்ற முஸ்லிம்களுக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் இல்லை. இஸ்லாமிய கட்டாய கடமைகளை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று அவர்களும் கூறுகின்றனர். உங்களது கருத்தும் அதுவே. அத்தனை கடமைகளையும் ஓர் அஹ்மதி ஏற்றுக் கொள்வதாக வாதிக்கிறார். அவ்வாறே மற்றவர்களும் நாவினால் இந்த வாதத்தைத் தான் வைக்கின்றனர். எந்த அளவுக்கு எனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோற்றத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மரணத்தை ஒரு பிரிவினர் ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். பிறகு இரத்த வெறி கொண்ட மஹ்தி வருவார்; கொல்வார்; சீர்திருத்துவார் என்ற கொள்கைகளும் கூட அவர்களிடமிருந்து மாறி விட்டன.

கடந்த ஜும்ஆவிற்கு முந்தைய ஜும்ஆவில் நான் சஹாபாக்களின் சம்பவங்களைக் கூறினேன். அதில் ஒன்று, ஒரு சஹாபி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியிடம், நீங்கள் தான் இரத்தவெறி கொண்ட மஹ்தியை மறுக்கிறீர்கள். நீங்கள் அதனை மறுப்பதாக மக்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இரத்தவெறி கொண்ட மஹ்தி எவரரும் வரமாட்டார் என்று கூறும் போது மட்டும் நீங்கள் ஏன் ஆட்சேபனை செய்கிறீர்கள்? என்று கேட்டார். அப்போது அவர், மிர்ஸா சாஹிபிடம் பைஅத் செய்ய நினைத்தால் போய் பைஅத் செய்யும். இந்த சிக்கலில் போய் மாட்டிக் கொள்ளும். எனது கொள்கை இதுதான் என்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராகப் பேசும் போது மட்டும் இரத்தம் சிந்தும் மஹ்தி தான் வருவார்; மஸீஹும் வருவார் என்கின்றனர்.

ஆனால் அவர்களுள் பலரது கொள்கைகள் மாறி விட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகை மூலம் முஸ்லிம்களுள் பலரது கொள்கைகளில் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது.

இன்னும் சொல்வதாயின், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு குத்பாவில் இன்றிலிருந்து 76 வருடங்களுக்கு முன் கொள்கை மற்றும் செயல்கள் என்ற கருத்தில் ஒரு குத்பா அல்ல. பல குத்பாக்கள் உள்ளன; குத்பாவின் ஒரு தொடரையே வழங்கியுள்ளார்கள். அதில் விளக்கியும் உள்ளார்கள்.

இந்தியாவில் நன்கு படித்த முஸ்லிம்களில் பத்தில் ஒருவர் கூட மஸீஹின் மரணத்தை ஏற்றுக் கொண்டவர் இல்லை. அதுபோன்று திருக்குர்ஆன் வசனத்தின் நாஸிக் மன்சூக் பற்றி பொதுவாக கூறப்படுவதில்லை. முதலில் இருந்த கடுமை இப்போது இதில் இல்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனையும் நிரூபித்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோற்றத்திற்குப் பிறகு சில கொள்கைகளின் மீது பிற முஸ்லிம்கள் கொண்டிருந்த கடுமை இப்போது தற்காப்பு நிலைக்கு வந்து விட்டது. அதிலிருந்த கடுமை குறைந்து விட்டது. ஒன்று அவர்கள் நம்புகின்றனர் அல்லது அமைதியாக இருந்து விடுகின்றனர். இதுவே இன்று வரை உள்ள நிலையாகும். இன்னும் சொல்லப்போனால் சில உலமாக்கள் – அவர்களுள் அரபு நாட்டின் அறிவு ஜீவிகளும் அடங்குவர். ஜிஹாது இயக்கங்கள், தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக பேசத் தொடங்கியுள்ளனர். தற்காலத்திலுள்ள அவர்களது ஜிஹாது கொள்கை தவறு என்கின்றனர். தமது அடிப்படை கொள்கை என்று கூறி வந்த இந்த கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டதென்றால் அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதத்திற்கு பிறகுதான் இந்த கல்வியாளர் என்று அழைக்கப்படுவோர் உலகத் தொடர்பு கொண்டோரிடம் ஏற்பட்டுள்ளது. ஜிஹாத் பற்றி எல்லாம் அது தவறு என்று பேசத் தொடங்கியுள்ளனர். இந்த மாற்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்திற்குப் பிறகு, ஜிஹாதிற்குரிய சரியான விளக்கத்தை வழங்கிய பிறகுதான் உருவாகியுள்ளது. அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும் சரி, ஏற்றுக் கொண்டிராவிட்டாலும் சரி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகளை அவர்களுள் ஒரு பெரும் பிரிவு ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்தில் உள்ளார்கள் என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரமாகும்.

இப்போது விவாதம் ஓரிடத்தில் வந்து மையம் கொண்டு விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஸ்தானம் நபி என்பதா? இல்லையா? இதுவும் ஒருநாள் இன்ஷா அல்லாஹ் முடிவுக்கு வந்து விடும். அதுபோன்று நமது பொதுவான ஜமாஅத் நிலைபாடுகளை – போதனைகளைப் புரிய அவர்கள் விரும்புவதில்லை. எள்ளி நகையாடுகின்றனர். அவர்களிடம் ஆதாரம் எதுவுமில்லை. நம்முடைய கொள்கைகள்

விஷயத்தில் விவாதத்தில் அவர்கள் பதிலற்றுப்போன பிறகு அடி, உதை, கொலை என்று இறங்குகின்றனர். இதுவே இன்று அஹ்மதிய்யத்திற்கு எதிராக பிற பிரிவுகள் செய்து வருகின்றன. குறிப்பாக பாகிஸ்தானிலும் இந்தியாவின் சில இடங்களிலும் நடந்து வருகின்றன. நமது கொள்கைகளை தவறு என்று நிரூபிக்க இவர்களிடம் குர்ஆனிய ஆதாரமோ, அறிவுப்பூர்வமான ஆதாரமோ இல்லை என்பதற்கு இவையனைத்தும் ஆதாரமாகும். கைப்பற்றுகின்றனர்; அபகரிக்க வருகின்றனர். அடி உதையில் இறங்குகின்றனர். எனவே கொள்கையின் அடிப்படையில் ஆதாரங்களின் அடிப்படையில் அஹ்மதிகள் எந்த இடத்தில் இருக்கிறார்களோ அங்கு சென்று அவர்களால் போட்டியிட முடியாது. குறைவான அறிவு கொண்ட அஹ்மதிகள் தமது அறிவை மேம்படுத்தி அதை உறுதியாக்குங்கள்.

இக்காலத்தில் M.T.A.-வில் ராஹே ஹுதா போன்ற நிகழ்ச்சிகள் இதற்காகவே வழங்கப்படுகின்றன. அதிலிருந்து அதிக அளவு கற்றுக் கொள்ளுங்கள். எந்தவகை பலவீன மனப்பான்மையோ, தாழ்வு மனப்பான்மையோ கொள்ளாதீர்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள பெரும்பாலார் ஏன் அனைவருமே அல்லாஹ் நாடினால் தவிர தமது கொள்கையில் உறுதியாக உள்ளனர். பலவீனமானவர்கள் இருந்தால் நினைவில் கொள்ளுங்கள். எந்த கொள்கையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்முன் எடுத்து வைத்துள்ளார்களோ அதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். அதனை எந்த விதத்திலும் ஆதாரத்துடன் மறுக்க அந்நியர்களுக்கு ஆற்றல் இல்லை. எனவே பலவீனமான சிலரும் தம்மிடத்தில் உறுதியை ஏற்படுத்துங்கள். எந்த பலவீனத்தையும் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொள்கை மற்றும் அறிவு ரீதியாக மிக உயர் தரமான ஆதாரப்பூர்வமான படைப்புகளையும், நூல்களையும் வழங்கியுள்ளார்கள். அதுபோன்று அமல் ரீதியான விஷயங்களிலும் கவனமூட்டியுள்ளார்கள். கொள்கை மற்றும் அமல் சம்பந்தமான அவர்களது எழுத்துக்களின் தாக்கம் அஹ்மதி அல்லாதவர்களிடம் கூட காணப்படுகிறது. ஆனால் கொள்கையை மட்டும் திருத்திக் கொண்டால் போதாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமல்களை திருத்துவதற்காகவும் வந்துள்ளார்கள்.

நமது அமல்களைச் சீர்திருத்தாமல் கொள்கையை மட்டும் திருத்தி எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் அமல் தான் மற்றவரை நம் பக்கம் ஈர்க்கிறது. ஜமாஅத்தில் இணையவும் நமது பேச்சுக்களைக் கேட்கவும் அல்லது குறைந்தபட்சம் அமைதியாக இருக்கவும் வைக்கிறது. நற்செயல், தூய மாற்றம் ஆகியவை ஒரு மவுனமான தப்லீக் ஆகும். சிலர் பைஅத் செய்ய வந்து விட்டு விலகிப் போய் விடுகிறார்கள். காரணம் ஏதாவதொரு அஹ்மதியின் செயல் அவரை தடுமாற வைத்து விடுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்திலிருந்து நாம் விலகிக் கொண்டிருக்கிறோம். இடைவெளி ஏற்பட்டு விட்ட இக்காலத்தில் நாம் நமது கொள்கையுடன் அமலையும் கூட அதிகமாக பாதுகாப்பது அவசியமாகும். மிக மிக அவசியமாகும். கொள்கையின் அடிப்படையிலோ நாம் நிச்சயமாக வெற்றிப்போர் நிகழ்த்தியவர்கள் ஆவோம். ஆனால் கொள்கைக்கேற்ப அமல் இல்லை எனில், தரப்பட்ட போதனைக்கேற்ப செயல்படவில்லை எனில் அதனை தம்மிடம் கடைபிடிக்கவில்லையெனில், பிறகு படிப்படியாக பெயர் மட்டும்தான் எஞ்சியிருக்கும். நாம் பெரும்பாலான முஸ்லிம்களை அப்படித்தான் பார்க்கிறோம். தவறான காரியங்களில் மூழ்கியுள்ளார்கள். தொழுகைகளில் ஈடுபடுகிறார்கள் எனில் வெறும் கடமையைக் கழிக்கிறார்கள். பெரும்பாலார் அதனையும் பொருட்படுத்துவதில்லை. பொய் சாதாரணமாகி விட்டது. வெட்கமின்மை, சகஜமாகி வெளிப்படையாகவே நடக்கிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் அஹ்மதியல்லாத நண்பர் ஒருவர் என்னை சந்தித்தார். அவர் கூறினார். ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. தீவிரவாத இஸ்லாமிய வாதிகள் இஸ்லாமிய ரோஷம் என்று கூறிக் கொண்டு தாக்குதல் நடத்துகின்றனர். இஸ்லாமிய அமைப்பை கொண்டு வர விரும்புகின்றனர். பள்ளிக்கூடத்தில் தாக்குதல் தொடுக்கின்றனர். அப்பாவி பெண்கள், குழந்தைகளைக் கொல்கின்றனர். ஆனால் நான் பாகிஸ்தான் சென்ற போது இஸ்லாமாபாத்தில் மெயின் ரோட்டிலேயே ஒரு மதுபான ஆலை உள்ளது. இந்த தீவிரவாதிகள் அதனை ஒருநாளும் தாக்கியதே இல்லை. அதுவோ மிகவும் பகிரங்கமாகவே உள்ளது. மேலும் டி.வி சேனல்களில் நிர்வாணமான, வீணான நிகழ்ச்சிகள் பாகிஸ்தானில் இருந்தே வருகின்றன. பிற முஸ்லிம் சேனல்களிலும் வருகின்றன. இதற்கு எதிரில் எவரும் குரல் எழுப்பவில்லை. அதன்

மீது தாக்குதல் தொடுக்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும் இதுதான் இவர்களின் இஸ்லாமிய செயல்பாட்டின் நிலையாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மது தயாரிப்பவர், வைத்திருப்பவர், விற்பவர், ஊற்றித் தருபவர், குடிப்பவர் ஆகிய அனைவர் மீதும் சாபமிட்டுள்ளார்கள். இந்த சாபத்தை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்! ஆம்! மது ஆலைகள் உள்ளன. ஆனால் அஹ்மதிகள் கலிமா சொல்வதைத்தான் இவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எவ்வாறிருப்பினும், நான் கூறி வந்தேன். நாமும் இந்த சமூகத்தில் வாழ்கிறோம். இந்த சமூகத்தின் தாக்கம் நம்மீதும் படலாம். நாமும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கத்தைப் புரிந்தவாறு நமது அமலின் நிலையைக் கவனிக்க வேண்டும். அப்போதுதான் நாம் கொள்கையின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியும். குறிப்பாக பெரியவர்கள், குழந்தைகளையும் இளைஞர்களையும் கண்காணித்து வர வேண்டும். இளைஞர்கள் சுயமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இக்காலத்தின் எதிரி விடுகளில் நுழைந்து நல்லொழுக்கத்தை அழித்து ஒவ்வொருவரின் அமலையும் கெடுக்க முயலுகின்றனர். நான் கூறியது போன்று டி.வி. சேனல்கள் நல்லொழுக்கம், நற்செயல் ஆகியவற்றின் கோணத்தையே மாற்றி விட்டது. அதுபோனறு இன்டர்நெட் மற்றும் பிற ஊடகங்கள் இவற்றிற்கு எதிராக நாம் இணைந்து ஜிஹாது செய்யா விட்டால் அமல்களின் சீர்திருத்தம் ஒருபுறம் இருக்கட்டும். ஷய்த்தானிய அமல்களின் பிடியில் விழுந்து விடுவோம். அதிலிருந்து தப்ப வேறு வழியில்லை. நாம் குறிப்பாக ஜிஹாது வடிவில் அல்லாஹ்விடம் உதவி கேட்பதை தவிர வேறு வழியில்லை.

அதற்கு எதிராக எழுவதுடன் இறை உதவியையும் கேட்க வேண்டும். அதற்காக நாம் அல்லாஹ்வை அழைக்க வேண்டும். அப்போது நாம் தப்ப முடியும். நான் ஓர் இறைவன் மீது உறுதி கொண்டுள்ளேன் என்று கூறுவது போதுமானதன்று. மாறாக, அந்தவோர் இறைவனுடன் தொடர்பை உருவாக்குவதும் அவசியமாகும். அதன் மூலமே இந்த ஷத்தானிய அமலிலிருந்து தப்பிக்க முடியும். அவை நமது வீடுகளின் அறைகளை வந்தடைந்து விட்டன. அதுவன்றி இந்த தீமைகள், நோய்களிலிருந்து தப்பிப்பதற்கு வேறு வழியில்லை.

கூறுகின்றார்கள்: ஒரு பெரியவருக்கு ஒரு சீடர் இருந்தார். அந்த சீடர் கல்வியைப் பூர்த்தி செய்ததும் ஊர் திரும்ப இருந்தார். அப்பெரியவர் அந்த சீடரிடம் கேட்டார். நீங்கள் வசிக்கப்போகிற ஊரில் ஷய்த்தான் இருப்பானா? சீடர் வியந்து போய் கேட்டார். ஷய்த்தான் எங்கு தான் இல்லை? ஷய்த்தான் எல்லா இடத்திலும் தான் இருக்கிறான். அப்பெரியவர், என்னிடம் நீங்கள் கற்ற மார்க்கம் பற்றியும், நல்லொழுக்கம் பற்றியும் நீங்கள் கற்றவற்றை அமல் செய்யும் போது, ஷய்த்தான் தாக்குதல் தொடுத்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார். அதற்கு சீடர், எதிர்த்து நிற்பேன் என்றார். சரிதான்! உமது கவனம் வேறு பக்கம் இருக்கும் போது வந்து தாக்கினால் என்ன செய்வீர்? என்று பெரியவர் கேட்டார். அதற்கு சீடர், எதிர்த்து நிற்பேன் என்றார். அந்தப் பெரியவர் இரண்டு மூன்று தடவை இப்படியே கேட்டார். பிறகு அவர், நீங்கள் ஒரு நண்பரிடம் போகிறீர்கள். அவரது வீட்டு வாசலில் ஒரு நாய் கிடக்கிறது. அது உம்மைக் கண்டு குரைக்கிறது. உம்மை தாக்க வருகிறது. என்ன செய்வீர்? என்று கேட்டார். அதற்கு சீடர், அதனை அச்சுறுத்தி விரட்ட முயல்வேன் என்றார். பிறகும் தாக்க வந்தால் என்ன செய்வீர்? என்று பெரியவர் கேட்டார். அதற்கு சீடர், அதனையே செய்வேன் என்றார். பெரியவர், நீர் அப்படியே செய்து கொண்டிருந்தால் உன் நண்பனை அடைய மாட்டீர். பிறகு என்ன செய்வீர் என்று கேட்டார். அதற்கு சீடர், உமது நாயைப் பிடியும் என்று கூறி எனது நண்பருக்கு குரல் கொடுப்பேன் என்றார். அப்பெரியவர், ஷய்த்தானும் இறைவனது நாய் ஆவான். அவனிடமிருந்து தப்பிப்பதற்காக நீர், இறைவனை அழைக்க வேண்டும். அவனது வாசலைத் தட்ட வேண்டும். அப்போது தான் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்க முடியும்.

எனவே நமக்கு அறிவு கிடைத்து விட்டது. நல்லொழுக்கத்தையும் முழுமையாக பெற்று விட்டோம். நல்லது நமக்கு தெரியும். தொழவும் செய்கிறோம் என்ற மமதையில் இருப்பீர்கள் எனில் ஷய்த்தான் தாக்குதல் தொடுப்பான். உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே இறைவனிடம் உதவி தேடுவது அவசியமாகும். கலப்பற்ற முறையில் அவனுக்கு இபாதத் செய்வது அவசியமாகும். அப்போதுதான் ஷய்த்தானிய

தாக்குதல்களிலிருந்து தப்ப முடியும். அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்த அவனது நெருக்கம் பெற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்தின் கீழ் வந்ததும் கொள்கையை சீர்படுத்தியதும் போதுமானதல்ல. அதற்காக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். நான் கூறியது போன்று அவன் முன் குனிய வேண்டும். களங்கமற்ற முறையில் அவனுக்கு இபாதத் செய்ய வேண்டும். அமல் ரீதியான முயற்சி இருந்தால், தவ்பா, இஸ்திக்ஃபார் பக்கம் கவனம் இருந்தால், அதே இடத்தில் மிக அவசியமான ஒன்று தொழுகையாகும். அல்லாஹ் தொழுகையை நிலைநாட்டுவதன் பக்கம் பல இடங்களில் கவனமூட்டியுள்ளான்.

பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை மூஃமின் உடைய மிஃராஜ் ஆகும். அதாவது அந்நிலையில் மூஃமின் இறைவனது நெருக்கத்தில் வருகிறார். அவனிடம் பேசுகிறார். எனவே ஷய்த்தானிடம் இருந்து தப்புவதாயின், காலத்தின் வீணான அனாச்சாரங்களிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் நமது தொழுகைகளை பாதுகாக்க வேண்டும். அல்லாஹ் வெற்றி பெற்ற மூஃமின்களின் அடையாளமாக அவர்கள் தமது தொழுகைகளை பேணுவார்கள் என்று கூறியுள்ளான். எனவே, தொழுகையானது நிச்சயமாக தீய, மானக்கேடான காரியங்களிலிருந்து தடுக்கிறது. அந்த தொழுகை கலப்பற்ற முறையில் இறை திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்பட வேண்டும். எனவே, ஷய்த்தானுடைய தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு இறை உதவி கேட்பதற்கு சிறந்த ஊடகம் தொழுகையாகும்.

இக்காலத்தின் வீணான காரியம் மிகுந்த சூழ்நிலையில் இதன் பக்கம் இன்னும் அதிகமாக கவனம் செலுத்துவது அவசியமாகும். குழந்தைகளைக் கண்காணிப்பதும் அவசியமாகும். அவர்களுக்கும் தொழுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு கூறுவதற்கு முன் பெரியவர்கள் தமது தொழுகையைப் பேண வேண்டும். தம்மை முதலில் பார்க்க வேண்டும். அல்லாஹ் யுகீமூனஸ் ஸலாத் என்று கூறும் போது அதன் பொருள் ஜமாஅத்துடன் தொழ வேண்டும். அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும். நான் பார்க்கிறேன். பருவநிலை மாறியவுடன் நேரம் பின் செல்கிறது. இரவு சுருங்கி விடுகிறது. எனவே ஃபஜ்ருக்கான வருகை குறைந்து விடுகிறது. கடந்த நாட்களில் முழுவதுமாக பின்னே போய் விடவும் இல்லை. 5.00 மணிக்கு சுபுஹ் வந்தது. உடனே ஃபஜ்ர் தொழுகையில் வருகை குறைந்து விட்டது. இப்போது ஒரு மணி நேரம் கூடியவுடன் வருகை சற்று அதிகமாகியுள்ளது. ஜுமுஆவுடைய நாளில் வருகை சற்று அதிகரிக்கிறது. நேரம் இன்னும் பின்னால் செல்ல உள்ளது. எனவே பெரியவர்கள் இதன் பக்கம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். நேரம் பின்னால் போய் விட்டால் உடனே சோம்பல் காட்டுவது ஓர் அஹ்மதிக்கு சரியில்லை. எனவே முதலிலேயே கவனமூட்டுகிறேன். நேரம் குறையும் போது ஃபஜ்ர் தொழுகையில் வருகை குறையக் கூடாது. குறிப்பாக பொறுப்பாளர்கள் தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதில் சோம்பேறித்தனம் காட்ட வேண்டாம். ஏனெனில் அவர்களிடம் சோம்பேறித்தனம் காணப்படுகிறது. ஒவ்வொரு பிரிவினரின் பொறுப்பாளர்களும் மஸ்ஜிதுக்கு வந்து விட்டால் மஸ்ஜிதின் பொலிவு கூடி விடும். பிறகு சிறுவர்களிடமும் இளைஞர்களிடமும் கூட அதன் தாக்கம் ஏற்படும். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எவரது மதிப்பும் எந்த பதவியினாலும் அல்ல. உலகின் முன் வேண்டுமானால் அவர் நிச்சயமாக பொறுப்பாளராக இருக்கலாம். அதற்கு மரியாதையும் இருக்கலாம். ஆனால் அசல் விஷயம் இறை அன்பைப் பெறுவதுதான். அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று தொழுகையின் மூலமே கிடைக்கும்.

அன்னார் கூறினார்கள்: தொழுகை மிஃராஜ் ஆகும். இந்த மிஃராஜை பெற முயற்சி செய்ய வேண்டும். முதலில் பொறுப்பாளர்கள் தம்மை ஆய்வு செய்யட்டும். பிறகு அவர்களின் தாக்கத்தின் கீழ் உள்ள சிறுவர்கள் இளைஞர்களுக்கும் கவனமூட்டுங்கள். தொழுகையினை நிலைநாட்ட முயலுங்கள் என்ற குரல் எல்லா பக்கமும் கேட்கும் போது தான் நமது வெற்றி இறங்கி வரும். அதுவன்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் எனறு கொள்கை வைப்பதனாலோ அல்லது திருக்குர்ஆனின் எந்த வசனமும் மாற்றப்படவில்லை என்றும் நம்புவதனாலோ அல்லது எல்லா நபிமார்களும் குற்றமற்றவர்கள் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னறிவிக்கப்பட்ட அதே நபர் தான் என்று நம்புவதிலோ மட்டும் நமது வெற்றி இல்லை. நமது வெற்றி நமது அமல் நிலையை இறைவன் தந்த போதனைக்கேற்ப ஆக்குவதில் உள்ளது. அதில் மிக முக்கியம் தொழுகை மூலம் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்துதல் ஆகும். அதுவன்றி நமது வாதமும் தவறு.

அதாவது நாம் ஷிர்க் செய்யமாட்டோம் என்ற நமது வாதம் தவறாகி விடும். தொழுகைகளைப் பேணாமல் ஷிர்க் தான் செய்து விட்டோமே! அல்லாஹ் கட்டளையிட்டு விட்டான். தொழுங்கள்; தொழுகைக்காக வாருங்கள். தொழுகைகளைப் பேணவில்லை எனில் தொழுகையின் இடத்தில் வேறு ஒரு பொருள் நம்மிடம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது மறைமுகமான ஷிர்க் ஆகும். பிறகு எந்த நற்செயல்களின் பக்கம் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளானோ அதில் ஒன்று பிறரது உரிமையைப் பாதுகாத்தல் ஆகும். உலகப் பேராசைக்குள் மாட்டிக் கொண்டு பிறரது உரிமை பறிக்கப்படுகிறது. அப்போது கடும் தலைகுனிவு ஏற்படுகிறது. ஜமாஅத்திற்கு வெளியில் உள்ளவர்களிடமிருந்து நமக்கு கடிதம் வரும் போது பெரும் துயரம் ஏற்படுகிறது! உங்களது இந்த அஹ்மதி என்னை ஏமாற்றி விட்டார். எனது உரிமையை பெற்றுத் தாருங்கள் என்கிறார்.

இவ்விஷயங்கள் தப்லீகிலும் பெரும் தடையாக அமையும். இன்னும் சொல்வதாயின் சில புதிய அஹ்மதிகள் தடுமாறவும் காரணமாக அமையும். கடந்த சில நாட்களுக்கு முன் ஓர் அரபு அஹ்மதி எனக்கு எழுதியுள்ளார். நான் ஜமாஅத்தை விடப் போகிறேன். காரணம் கேட்ட போது, இவருக்கு சில அஹ்மதிகளின் செயல்களில் அதிருப்தி இருப்பதாக தெரிய வந்தது. ஆனால் கொள்கை அடிப்படையில் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வாதத்தில் உண்மையானவர் என உறுதி கொண்டிருந்தார். சில அஹ்மதிகளைப் பார்த்து ஜமாஅத் அமைப்பை விட்டு விலகுவது அவரது தவறாகும். அதே வேளையில் அந்த அஹ்மதிகளும் சிந்திக்க வேண்டும். அவர்களுள் சில பொறுப்பாளர்களும் உள்ளனர். அவர்கள் ஒருவரது தடுமாற்றத்திற்கு காரணமாக அமைந்து எவ்வளவு பெரிய பாவத்தை தேடியுள்ளார்.

ஒரு விஷயத்தின் பக்கம் குறிப்பாக கவனமூட்ட விரும்புகின்றேன். அல்லாஹ்வின் அருளால் நிச்சயமாக ஜமாஅத் பொருள் தியாகத்தில் ஆர்வத்துடன பங்கேற்கின்றனர். ஆனால் பொருள் தியாகத்தின் ஓர் அம்சம் ஸகாத் ஆகும். இதன் பக்கமும் கவனம் செலுத்துவது அவசியமாகும். குறிப்பாக பெண்கள் அவர்களிடம் நகைகள் உள்ளன. அதுபோன்று ஒரு வருடத்திற்கு மேலாக ரொக்கம் வைத்திருப்பவர்கள் உள்ளனர். அஹ்மதிக்கு இதன் பக்கம் கவனம் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லை.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் மக்கள் அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு பைசாவையும் கணக்குப்பார்த்து சந்தாவும் தருகின்றனர். ஸக்காத்தும் தருகின்றனர். ஆனால் சிலர் இருக்கின்றார். சந்தா மட்டும் போதுமானது என்று கருதுகிறார்கள். ஸக்காத் தருவதில்லை. செகரட்டரி மால்கள் கவனமூட்டுவதில்லை. எனவே இதன் முக்கியத்துவம் அவர்களுக்கு தெரியவில்லை. எனவே இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். பிறகு அமல்களை சரியாக்க திருக்குர்ஆனில் கூறப்பட்ட ஒவ்வொரு தீமையையும் விட வேண்டும். திருக்குர்ஆனில் கூறப்பட்ட ஒவ்வொரு நன்மையையும் கடைபிடிக்க வேண்டும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வழிகாட்டலைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு கட்டளைக்கு கூட கட்டுப்படாமல் இருக்காதீர்கள். எனவே நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். வெளிப்படையாக சிறு சிறு பாவத்தில் இருந்தும் கூட தப்பிக்க வேண்டும். ஆரம்பத்தில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள் படித்தேன். அதில் அவர்கள் இதைத்தான் கூறியுள்ளார்கள். சிறு சிறு பாவங்களால் பீடிக்கப்பட்டு விட்டு பிறகு இது பாவமில்லை என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். வெளிப்படையாக யாருக்கும் தென்படாத பாவங்களையும் கூட ஆழிய ஞானத்தைக் கொண்ட நுட்பமான பார்வையைப் பயன்படுத்தி நோட்டமிடுங்கள். நீங்களே தேடுங்கள். ஆய்வு செய்யுங்கள். பிறகு, இது உண்மையில் பாவம் என்று தெரிய வரும்.

காட்டுதலுக்கு உதாரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறியுள்ளார்கள்: அது பெரும்பாலும் யார் கண்களிலும் படாது. அவன் உண்மையில் உண்மையை அறிய விரும்பி ஆய்வு செய்து பார்த்தால் அவனால் புரிந்து கொள்ள முடியும். அவன் செய்கிற ஒரு காரியம் உலகத்திற்கு காட்ட செய்யப்பட்டதா அல்லது இறைவனுக்காகவா என்று தெரிய வரும். தனது ஒவ்வொரு செயலும் இறை திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் எனக்கு நன்மை கிடைக்கும் என்று மனிதன் உணர்ந்தால் நற்செயல்களின் பக்கம் முயற்சி செய்கிறான். அப்போது அவன் அதிகமதிகம் நற்செயல்களை தேடவும், அமல் செய்யவும் விளைவான். இது நடக்கும் போது காட்டுதலும் உருவாகாது. பிற தீமைகளும் உருவாகாது.

அதுபோன்று திருக்குர்ஆனில் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு கட்டளை உள்ளது. இதில் எல்லாவற்றிற்கும் முதலில் தமது பெற்றோர், மனைவி, குழந்தைகளிடமும், அதுபோன்று தொடர்புக்கு ஏற்ப உறவுகள் சம்பந்தமாகவும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக நான் கூற விரும்புவதாவது, இக்காலத்தில் ஆண், பெண் இருவரிடமும் சகிப்புத்தன்மை குறைவாக காணப்படுகிறது. ஆனால் சகிப்புத்தன்மை மற்றும் பொறுமை குறித்து இறைவன் மிகவும் கவனமூட்டியுள்ளான். இந்த குறைவின் காரணத்தால் விவாக முறிவுகளின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. எவருக்கும் இதில் கவனமில்லை. அவர்களுக்கு குழந்தைகள் உள்ளனர். நமது குழந்தைகளிடமும் இதனால் என்ன தாக்கம் ஏற்படும்? என்ற கவனமில்லை. எனவே இரு தரப்பிலும் தக்வாவில் குறை உள்ளது. அமல்களும் குறைவாக உள்ளதை இது வெளிப்படுத்துகிறது. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். நமது சத்தியம் பிறர் மீது வெளிப்பட நமது ஒவ்வொரு விவகாரத்திலும் சத்தியம் வெளிப்பட வேண்டும். நமது சொந்த விஷயத்தில் நமது நடைமுறை, சுயநலம் பேணுவதாக இருந்தால் பைஅத்தில் வந்த பிறகு அமலை சீர்திருத்துவதாக உறுதி எடுத்ததை நிறைவேற்ற முடியாது.

திருக்குர்ஆன் கூறுகிறது: உண்மை, நீதிக்காக உங்களுக்கு எதிராகவும் உங்கள் பெற்றோருக்கு எதிராகவும் உறவினருக்கு எதிராகவும் கூட சாட்சி சொல்லுங்கள். ஆனால் எதார்த்தில் நமது நடைமுறை இதற்கு மாற்றமாக இருந்தால் என்ன புரட்சியை நாம் கொண்டு வர முடியும்? நீதியை நிலைநாட்டுவதற்கு அறிவுரை கூறுமிடத்து மற்றவர்களிடம் திருக்குர்ஆனில் இந்த வசனத்தைத் தான் எடுத்து வைக்கிறேன். ஜமாஅத் அஹ்மதிய்யா மட்டுமே சரியான இஸ்லாத்தின் படி செல்கிறது என்று வாதம் செய்கிறேன். ஆனால் ஏதாவது ஒரு அஹ்மதியல்லாதவரின் அனுபவத்தில் ஒரு அஹ்மதியின் அமல் அதற்கு மாற்றமாக தெரிந்தால் அவரிடம் அதற்கு என்ன தாக்கம் ஏற்படும்? அத்தகைய அஹ்மதி தப்லீகின் வழியில் ஒரு தடையாவார். எனவே நாம் நம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். நம்மை கணக்கெடுப்பது அவசியமாகும். அதுபோன்று திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. எனவே நமது செயல், சீர்திருத்தம் முழுமையாக நாம் எல்லா அடிப்படையிலும் எல்லா கோணத்திலும் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நமது தீமைகளைப் பார்க்க வேண்டும். நம்மிடம் செயல் சீர்திருத்தம் ஏற்பட்டுவிட்டால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் ஹக்கை நிறைவேற்ற முயன்றுள்ளோம் என்று விளங்கலாம். அதுவன்றி நாம் வெறும் ஏற்றுக்கொள்வதால் அவர்களது எல்லா வாதங்கள் மீது உறுதி கொள்வதால் ஒரு பகுதி மட்டும் ஏற்றுக் கொண்டு ஒரு பகுதியை விட்டு விட்டவர்கள் ஆவோம். ஆனால் அதுவும் முக்கியம் ஆகும். பிறகு ஒவ்வொரு சிறிய கட்டளையின்படி அமல் செய்வது அவசியமாகும். தமக்கு சிறிய நற்செயல் எது? என்றும், பெரிய நற்செயல் எது? என்றும் தெரியாது. ஒரு ஹதீஸில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு நற்செயல் ஒருவருக்கு சிறியது; மற்றவருக்கு அதுவே பெரியது. அதன் வரையறை பலவகைப்பட்டதாகும்.

உதாரணமாக ஒரு சஹாபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பெரிய நன்மை எது? என்று கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஜிஹாது ஃபீஸபீலில்லாஹ் –வே பெரிய நன்மையாகும் என்று கூறினார்கள். பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் இன்னொரு சஹாபி பெரிய நன்மை எது? என கேட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், பெற்றோருக்குப் பணிவிடை செய்வது என்று கூறினார்கள். பிறகு மூன்றாவது சந்தர்ப்பத்தில் மூன்றாவது ஒரு சஹாபி யா ரஸூலுல்லாஹ்! பெரிய நன்மை எது என்று கேட்டபோது அன்னார் கூறினார்கள். தஹஜ்ஜுத் தொழுவதாகும் என்று கூறினார்கள்.

தஹஜ்ஜுத், நஃபில் தொழுவது இவ்வாறு பலதரப்பட்டவர்களுக்கு பலத்தரப்பட்ட விஷயங்கள் மீது அன்னார் கவனமூட்டியுள்ளார்கள். எனவே பெரிய நன்மை மூன்று அல்லது மூன்றுக்கு மேல் பல்வேறு மக்களுக்கு அவரவர் பலவீனத்திற்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கவனமூட்டியிருப்பார்கள். பெரிய நன்மை என்பது ஒன்று தான் இருக்க முடியும். ஹஸ்ரத் நபி ( ஸல்) அவர்களின் பார்வையில் பெரிய விஷயமாவது எந்த நன்மை ஒருவரிடம் குறைவாக உள்ளதோ அதுவேயாகும். ஒருவர் தமது பெற்றோருக்குப் பணிவிடை செய்யாவிட்டால், மனைவி மக்களது உரிமையை வழங்காவிட்டால் அவருக்கு மார்க்க சேவை பெரிய நன்மையல்ல. அவர் சுயநலத்திற்காகவோ, பெயர் புகழுக்காகவோ செய்திருக்கலாம். அத்தகையோரின் வீட்டினர் அவருடைய நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்துள்ளனர். அவர்களோ பொறுப்பாளர்களாகவும் உள்ளனர். அவர்கள் மார்க்க சேவை செய்து நற்கூலியைப் பெற வேண்டுமென்றால் வீட்டினருக்காகவும் பணிவிடை செய்வது அவசியமாகும்.

ஒரு மனிதர் சந்தாவில் நல்ல நிலையில் உள்ளார். ஆனால் தொழுகையில் சோம்பேறியாகவும், நஃபில்களில் சோம்பேறியாகவும் உள்ளார் எனில் அவருக்கு நன்மை என்பது நஃபில்களும், தொழுகைகளும் ஆகும். இதுபோன்று பல நன்மைகள் உள்ளன. அவை ஒருவருக்கு சாதாரணமானவை. மற்றவருக்கு பெரியவை. எனவே சிறியவை பெரியவை என்று நன்மைகளுக்கு ஒரு பட்டியல் எதுவும் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காட்டுதலை ஒரு உதாரணமாக தந்துள்ளார்கள். சிறு சிறு பாவங்களுக்கு உதாரணமாக காட்டுதல் என்று கூறுகிறார்கள். இங்கும் அதற்கு இதுவே பொருளாகும். வெளிப்படையாக சிறு பாவமாகத் தெரிபவை உண்மையில் பெரும் பாவமாகி விடுகிறது.

தொழுவது பெரும் நன்மையான காரியம் தான். இறைவனின் நெருக்கம் பெற்றுத் தருவதாகும். மார்க்கத்தில் மிஃராஜ் ஆகும். ஆனால் காட்டுதலான தொழுகை ஏற்கப்படாது. மாறாக திருப்பி தரப்படுகிறது. இவ்வாறு ஒரு மனிதன் தொழுகையாளி. ஆனால் பிறரது உரிமையைப் பறிக்கிறார் எனில் அவரது தொழுகை நன்மையல்ல. அவரது தொழுகை சிறந்ததாக இருந்தால் அடுத்தவரின் உரிமையைத் தந்திருப்பார். பிறகு தொழுது தொழுகையின் நன்மையையும் பெற்றிருப்பார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோளை நான் படித்தேன். அதில் அன்னார் இஸ்லாத்தின் கடமைகளைப் பற்றி கூறினார்கள். நோன்பும் ஒரு கடமையாகும். முஸ்லிம்கள் ரமலானில் நோன்பு வைப்பதற்காக உறுதி எடுக்கின்றனர்.

ஆனால் பெரும்பாலான நோன்பாளிகள் நோன்பு வைத்துக் கொண்டு பொய், தந்திரம், ஏச்சுக்கள், புறம் போன்ற காரியங்களை செய்கின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் நோன்பு வைத்துக் கொண்டு இவ்வாறு செய்தால் இறைவனின் பார்வையில் அவரது நோன்பு நோன்பல்ல. எனவே நோன்பின் நன்மையும் போய் விட்டது. எனவே அசல் விஷயமாவது எந்த அமலை இறைவன் எவ்வாறு கட்டளை இட்டானோ அவ்வாறு செய்வதாகும்.

எனவே மனித வாழ்வின் ஒவ்வொரு அடியையும் கவனமாக வைக்க வேண்டும். களங்கமற்ற தூய திருப்தி மட்டுமே முதன்மையாக இருக்க வேண்டும். கொள்கையில் உறுதியாக இருக்கும் அளவுக்கு அமலும் கூட சீர்திருத்தம் பெற்றிருக்க வேண்டும். ஓர் அஹ்மதிக்கும் மற்றவருக்கும் என்ன வித்தியாசம் என்று உலகிற்கு தென்பட வேண்டும். எனவே நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எல்லா வகையான தீமையில் இருந்தும் தப்பிக்க வேண்டும். எல்லா நன்மைகளையும் செய்ய வேண்டும். அதன் மூலம் அமல் ரீதியாக தம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உங்கள் சிறியவர்களுக்கு முன்னுதாரணமாக திகழுங்கள். உங்கள் இளைஞர்களுக்கும் முன்னுதாரணமாக ஆகுங்கள். உங்கள் வீடுகளில் உங்கள் மனைவிகளுக்கும் முன்னுதாரணமாக இருங்கள். உங்கள் கூட பணி செய்பவர்களுக்கு முன்னுதாரணமாக இருங்கள். உங்கள் அமலின் நிலையில் ஒவ்வொரு சிறிய பெரிய அமலிலும் இடையிலுள்ள தீமைகளை ஒவ்வொருவரும் களைந்து விட வேண்டும். அதன் வேரையே அகற்றி விட வேண்டும். ஜமாஅத்தில் ஒவ்வொருவரும் தம்மை சீர்திருத்த முயற்சி செய்யாவிட்டால் ஜமாஅத்தில் எப்போதும் ஏதாவது ஒரு வகையான தீமையின் விதை இருந்து கொண்டே இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது அது முளைத்து விடும்.

எல்லா வகையான தீமையின் வேரையும் நம்மில் ஒவ்வொருவரும் நம்மிலிருந்து களைய முயல வேண்டும். அப்போதுதான் நாம் எல்லா வகையான தீமைகளையும் ஜமாஅத்திலிருந்து களைந்து அமலின் சீர்திருத்தத்தின் உண்மையான வடிவமாக ஆக முடியும். பிறகு வெற்றிகளின் காட்சியை அப்போது அல்லாஹ் நமக்கு காட்டுவான். அப்போது நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் நெருக்கத்தை நாம் பெற முடியும். அல்லாஹ் நமக்கு அதற்கு வாய்ப்பு தருவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 30.03.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456